# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரேமதூத ஹூ பங்குனி ச 11 உ திங்கட்கிழமை [25-03-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 118

## கிரைப் வாட்டரில் 16 வீதம் மதுசாரம்!

கொழும்பு, மார்ச் 25

குழந்தைகளுக்கான கிரைப்வாட்டர் மற்றும் ''விட்டமின் சிறப்'' வகைகளில் ஐந்து சத வீதத்திற்கு அதிகமாக மதுசாரம் கலக்கக் கூடாது என்று சுகாதார அமைச்சு இவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு உத்தர விட்டுள்ளது.

தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படும் இத்தகைய பொருள்களில் சிலவற்றில் மதுசாரம் 16 சத வீதம் கலந்து இருப்பது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஈச்சிலம்பத்தை ராணுவம் பூநகரில் அட்டகாசம்

திருக்கோணமலை மாவட்டம் ஈச்சிலம்பத்தை முகாம் இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு பூநகருக்குச் சென்று அடாவடித்தனத்தில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினர் அங்கு ஒரு வீட்டை எரித்துவிட்டு, மற்றும் இரு வீடுகளை உடைத்து நாசம் செய்தனர்.

அப்பகுதியைச்சேர்ந்த நான்கு பெண்கள் உட்பட 10 பொதுமக்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

இதே சமயம் இப்பகுதி காட்டில் இராணுவத்தினர் வைத்துச் சென்ற 3 மிதி வெடிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## அக்கரைப்பற்றில் குண்டுவெடிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச், 25

கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றில் சந்தைப்பகுதியில் நேற்றுக்காலை சக்தி மிக்க இரண்டு குண்டுகள் வெடித்தன.

குண்டு வெடிப்பால் எட்டுப் பேர் உயிரிழந்தனர். ஐம்பது பேர்வரை காயமடைந்தனர். சந்தையின் ஒரு பகுதி எரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பை அடுத்து அக்கரைப்பற்றில் பெரும் பதற்றம் நிலவியதாகவும்—

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பேராசிரியர் மாரடைப்பால் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கிளிநொச்சி விவசாய பீடாதிபதி பேராசிரியர் சோ. கந்தையா சைக்கிளில் கடமைக்குச் சென்ற சமயம் மாரடைப்பால் மரணமானார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சனிக்கிழமை இரவு கிளிநொச்சிக்குச் சென்றுகொண்டிருந்த போது அவர் பூநகரிக்குச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# வவுனியா மினி முகாம் புலிகளினால் தகர்ப்பு!

## 13 ராணுவத்தினர் உயிரிழப்பு

### பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் மினிமுகாம் ஒன்று தகர்க்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் 13 பேர் உயிரிழந்தனர். அவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

வவுனியாவில் தம்பனாகுளம் இராணுவ முகாமுக்கும் சுடாரிக்குளம் இராணுவ முகாமுக்கும் இடையில் —தம்பனாகுளம் முகாமிலிருந்து சுமார் ஐநூறு யார் தூரத்தில் உள்ள — மினி முகாம் ஒன்றே விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயம் தம்பனாகுளம் முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி மினி முகாம் பகுதியை நோக்கி முன்னேற முற்பட்டபோது அவர்கள்மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்-

அதனையடுத்து வெளியேறிய இராணுவத்தினர் பலத்த சேதத்துடன் பின்வாங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் விக்கி (சுப்பையா மகேஸ்வரன் -சாஸ்திரகூழாங்குளம் -வவுனியா] என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ-3]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

சிலாவத்துறையில் நடந்து வரும் போரில் கடந்த வெள்ளியன்று விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி அசோக் [+னகரட்ணம் மோகனதாஸ்- மட்டக்களப்பு] வீரமரணமடைந்தார். [ஒ]

### மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியா மினி முகாம் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் குறித்து விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. அவற்றின் விவரம் வருமாறு:-

- ★ ஏ.கே.எல்.எம்.ஜி ரகத் துப்பாக்கி — 2
- ★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 6
- ★ ரவைக் கோர்வை — 475
- ★ சிங்கப்பூர் தயாரிப்பான 203 ரக கிரனேட் பிஸ்டல் — 1
- ★ இதற்குரிய 40 எம். எம் ஷெல்கள் — 6
- ★ ரி56-2ரகத் துப்பாக்கி — 1
- ★ ரி56 புதிய ரகத் துப்பாக்கி — 1
- ★ ரி56 பட்மொடல் துப்பாக்கி — 1
- ★ ரி56 மகஸின் — 8
- ★ G3A3ரகத் துப்பாக்கி — 2
- ★ இவற்றுக்குரிய ரவைக் கூடுகள் — 6

[6 ஆம் பக்கம் பார்க்க]

உள்ளூராட்சி சபைத் தேர்தல்:

## புலிகளின் கட்சிக்கும் அரசு அங்கீகாரம்!

கொழும்பு, மார்ச் 25

தற்போது வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அரசியல் கட்சிகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் ஒன்று.

தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா வெளியிட்டுள்ள உத்தியோக பூர்வ அறிவித்தலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களுக்கு தற்போது வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வருவது தெரிந்ததே.

இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதி பெற்ற — அங்கீகரிக்கப்பட்ட — 29 கட்சிகளின் பெயர் விவரங்களையும் அவற்றின் செயலாளர்களின் பெயர்களையும், அக்கட்சிகளின் சின்னங்களையும் தேர்தல் ஆணையாளர் பிரகடனம் செய்திருக்கிறார்.

அவற்றில் 12 தமிழ்க் கட்சிகளாகும்.

விடுதலைப் புலிகள் மக்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## 3 தமிழ்க் கிராமங்களை படையினர் சுற்றி வளைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

மட்டக்களப்பு மாவட்டம் சின்னவத்தை, 13 ஆம் கொலனி முகாம்களில் இருந்து கடந்த வெள்ளியன்று வெளியேறிய இராணுவத்தினர் பலாச்சோலை, ஆனைக்கட்டி வெளி, கல்வெட்டை ஆகிய மூன்று தமிழ்க் கிராமங்களைச் சுற்றி வளைத்தனர்.

அப்பகுதிகளில் கைது செய்யப்பட்ட ஒரு பெண், 9 ஆண்கள் ஆகியோரை ஆனை கட்டிவெளியில் படையினர் கட்டி வைத்தனர்.

அவர்களில் பெண் மட்டும் தப்பிச் சென்று விட்டார். 9 ஆண்களுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை. [ஒ]

# வெள்ளி, சனி யுத்த நிறுத்தம்!

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை முன்னிட்டு அங்கு 2 நாள் - 29, 30 ஆம் திகதிகளில் [வெள்ளி, சனி]ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க அரசு முடிவு செய்துள்ளது.

நேற்று முன்தினம் கூட்டுப் படைத் தலைமையகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டிருக்கிறது

இந்த மாநாட்டுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமை தாங்கினார்.

பரீட்சையை முன்னிட்டு இவ்விரு தினங்களிலும் பாது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



நாட்டிலை பெரும் 'குடி' மகன்கள் [illegible] உத்தம் கம்பனிக்காரரும் ஒரு காரணமோ.....

# சிலாவத்துறையில் யுத்தம் தொடர்கிறது

## படையினர் 50 பேர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

மன்னார் சிலாவத்துறையில் நேற்றும் தொடர்ந்து மோதல்கள் நடைபெற்றதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும் எடுப்பில் போர் நடப்பதால் வடபகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ களத்தில் நின்று ஆயுதப்படையினரை வழிநடத்துவதாகவும் அதே வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, சிலாவத்துறையிலும், கொக்குப்படையானிலும் கடந்த செவ்வாய் இரவு முதல் வெள்ளி இரவு வரை தொடர்ந்து நான்கு நாட்கள் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஐம்பது பேர் வரை உயிரிழந்ததாகத் தெரியவருகிறது.

இப்படையினரின் ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகவும் அறிய வந்தது.

கொக்குப்படையான் இரா

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் பரீட்சை நடத்த சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவும்

வவுனியா, மார்ச் 25

மார்ச் 30ஆம் திகதி நடைபெறவுள்ள ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் ஏப்ரல் 22ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை வட கிழக்கில் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை ஆகியவற்றுக்கான காகிதாதிகள், வினாத்தாள்கள் என்பவற்றைக் கொண்டு செல்லவும், விடைத்தாள்களை எடுத்து வருவதற்குமான போக்குவரத்து வசதிகளை வடக்கில் செய்வதற்கும், சிறுவர் பாதுகாப்பு நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான இறுதி முடிவு, கொழும்பில் உள்ள தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியத்தினால் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் செவ்வாய் அன்று எடுக்கப்பட்டது.

ஒன்றியச் செயலாளர் திரு. ஏ. ஜீ. எஸ். பாலசந்திரன் மேற்கண்ட விவரத்தைத் தெரிவித்தார்.

வட பகுதிக்கான பரீட்சை இணைப்பதிகாரி வவுனியா பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வவுனியாவில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் தொண்டர் நிறுவன அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

திட்டமிட்டபடி இப்பரீட்சைகள் வெற்றிகரமாக நடைபெறுமானால் ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையும் வடக்குக் கிழக்கில் நடத்தப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் திரு. ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை வவுனியா மாவட்டத்தில் 14 நிலையங்களில் நடைபெறும் 2000 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

வடக்கு-கிழக்குப் பகுதியில் எல்லாமாக 40 ஆயிரம் மாணவர்கள் தோற்றவிருக்கும் இப்பரீட்சை வடக்கில் உள்ள 5 மாவட்டங்களில் 150 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

(இ-164)

## கூச்சல் குழப்பத்துடன் நடந்த யாழ். செஞ்சிலுவைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்று கூச்சல், குழப்பத்துடன் நடைபெற்று முடிந்தது.

முன்னர் எதிர்பார்த்தவாறு முக்கிய பதவிகளுக்குத் தேர்தல்கள் இடம்பெறவில்லை.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தின் நேற்றுக் காலை 9-30 மணிக்கு வருடாந்தக் கூட்டம் கிளையின் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தலைமையில் ஆரம்பமானது

தலைமையுரையை அடுத்து செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை ஆகியன சமர்ப்பிக்கப்பட்டபோது சபையில் கூச்சலும் குழப்பமும் இடையிடையே கைதட்டல்களும் இடம்பெற்றன,

புதிய நிர்வாகிகள் தெரிவு ஆரம்பமான போது தலைவர் பதவிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த தற்போதைய தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தமது மனுவை வாபஸ் பெற்றார்.

அதனையடுத்து வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த மற்றைய வேட்பாளரான டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் தலைவரானார். தலைவர் பதவியை ஏற்க அவர் சபையில் இருக்கவில்லை.

அதைத் தொடர்ந்து செயலாளர் பதவிக்கு மனுத்தாக்கல் செய்த டாக்டர் திரு. வி.எஸ். கணேசலிங்கமும், பொருளாளர் பதவிக்கு மனுத்தாக்கல் செய்த நால்வரில் மூவரும் தமது மனுக்களை வாபஸ் பெற்றனர். இதனால் செயலாளராக திரு. எஸ். சிவானந்தராசாவும், பொருளாளராக திரு சற்குணலிங்கமும் தெரிவானார்கள்,

உப-தலைவர் பதவிக்கு நால்வர் மனுத்தாக்கல் செய்த போதும் இருவர் தமது மனுக்களை வாபஸ் பெற்றனர். இதனால் அப்பதவிக்குத் தேர்தல் நடந்தது திரு. ஜி. இராசேந்திரம் உப-தலைவராகத் தெரிவானார்.

செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்கும் தேர்தல் இடம் பெற்றது. [உ-3-5]

## கண்டியில் 29 தமிழர் கைது

கொழும்பு, மார்ச் 25

கண்டி நகரில் வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்து வந்த 29 தமிழர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வியாழன் இரவு நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று சொல்லப்பட்டது.

கைதானவர்களில் 55 வயதான முதியவர்களும் உள்ளனர்.

கண்டி நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அனைவரும் ஆஜர் செய்யப்பட்டனர்.

அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை அனைவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்

[இ-எ]

## துணுக்காயில் வங்கிக் கிளை

யாழ்ப்பாணம், மார்ச் 25

மக்கள் வங்கியின் மாங்குளம் கிளை துணுக்காயில் இயங்க ஆரம்பித்துள்ளது. தற்போது உள்ளக வேலைகளே நடைபெறுகின்றன.

மாங்குளத்தில் வங்கி அமைந்திருந்த கட்டடம் பொம்மர் தாக்குதலால் நாசமாகி விட்டதும் அங்கிருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிந்து விட்டன என்பதும் தெரிந்தனவையே. [ஒ-3]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ். கோட்டத்திற்குட்பட்ட-யாழ்ப்பாணம், நல்லூர் உ. அ. அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட - பயிலுனர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். [ஒ]


நல்லூரில்

[UEITS]

**United Engineers Institute of Technical Studies**

வழங்கும்

(பதிவு செய்யப்பட்டது)

பயிற்சி நெறிகள் மூலம்: தமிழ் / ஆங்கிலம்

1. Radio, T. V, Deck Servicing Assembling AM/FM/SW Radios, I C Amplifiers, Other I C Projects.
காலம் 6 மாதம்
2. Air Conditioning & Refregiration Servicing All Types.
காலம் 6 மாதம்
3. Electrical Wiring & Installation.
காலம் 3 மாதம்
4. Electric Gas Welding Practice.
காலம் 5 மாதம்

மின்சார வசதி — நவீன துரித செய்முறைப் பயிற்சிகள்

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆரம்பம்: April 5**

மாலை நேர வகுப்புகள் - வார இறுதி வகுப்புகள்
3 மணி — 6 மணி

- பணிப்பாளர் -

271, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர். [16204]


யாழ். பல்கலைக்கழகம்

**அமைய பாதுகாப்பு காவலர்**

1991-3-18 அன்று நடைபெற்ற மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு எம்மால் அனுப்பப்பட்ட கடிதம் தாமதமாகக் கிடைக்கப்பெற்று நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் 1991-4-2ஆம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் நடைபெறும். நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

—பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1991-03-21
[சி-5883]


விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**O/L** DEC. 91. பிரிவு 2
Day Classes
[8 - 30 — 1 - 30]
Evening Classes
[3 - 00 — 5 - 40]

**ஆரம்பம்: 27 - 03 - 1991**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| விஞ்ஞானம்: - | திரு. J. R சூரி |
| கணிதம்:- | திரு. மதி |
| தமிழ்:- | திரு. திருப்பதி<br>திரு. தர்மகுலசிங்கம் |
| சமயம்:- | திரு. சங்கர் |
| ஆங்கிலம்:- | திரு. விஸ்வநாதன் |
| சமூகக்கல்வி: - | திரு. கோபி |
| வர்த்தகம்:- | திரு கருணாகரன் |

[சி/5880]


## 6ஆம் மாத நினைவு



தாய் மடியில்: 23 — 06 — 1963

அவனடியில்: 16 — 09 — 1990

### குமாரசாமி ராஜேஸ்வரன்

அந்தியேட்டி: 1991 — 03 — 25

திரைகடல் ஓடி நல்ல திரவியம் தேடவென்று
நிறைவுடன் நிம்மதியாய் வாழ்ந்திடவே இங்கு வந்து
வெளிநாட்டிற்குச் சென்றீரே
வாட்டமுடன் எம்மை விட்டு
வெளிநாட்டு வாழ்க்கையிது வாசமின்றி போயினது
களிப்பில்லை இனி கண்ணீர் தான் இங்கு எமக்கு
பாதகன் காலனவன் கவர்ந்தானே இனியார் எமக்கு
விழிகளில் நீருமில்லை
நல்ல விடியலும் எமக்கோ இல்லை
களி கொள்ள வழியுமில்லை
இனிக் கண்ணீரே காலமென்று
காலத்தால் மரணம் வந்தால்
காலமென்றுரைப்போம்
பாதகராய் மரணம் தந்தால்
எப்படி அதையுரைப்போம்
தேவலோகம் சேர்ந்திட்ட தம்பியே எம்முயிரே
தேவரோடு தேவராக தேன் தமிழால் அஞ்சலிகள்

தாய், சகோதரர்கள், அண்ணிமார்,
மச்சான், மாமன்மார், மாமிமார்,
குடும்பத்தினர்.

கொல்லன் தோட்டம்,
நெல்லியடி, கரவெட்டி. [சி-5884]

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சம்பந்தர்

[ இளைப்பாறிய ஆசிரியர் ]

அளவெட்டி வடக்கு வேலுப்பிள்ளை சம்பந்தர் [இளைப்பாறிய ஆசிரியர்] 24-3-91 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி வேலுப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி ச. அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி வே. தவமணிதேவி, செல்வி இரஞ்சிதமலர், [ஆசிரியை. மகாஜனாக் கல்லூரி], செல்வன் திருவருட்செல்வம், செல்வி ஜெயக்குமாரி [ஆசிரியை, பொகவந்தலாவை தமிழ் வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வேலாயுதபிள்ளையின் அன்பு மாமனாரும், செல்விகள் அனித்தா, சயித்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-3-91 இன்று காலை 10 மணியளவில் அளவெட்டியில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திரு. கி. வேலாயுதபிள்ளை

ஜெயகிரி.
அளவெட்டி வடக்கு. [16219]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்**

**11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

எமது கிளை அலுவலகம் மீண்டும் 01-04-91 திங்கட்கிழமை தொடக்கம் திறக்கப்படவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அலுவலக நேரம்: காலை 9மணி முதல் நண்பகல் 12மணி வரை

[16206] கிளை முகாமையாளர்



## விசேட அறிவித்தல்

## S. L. E. A. S. (Ltd.)

விண்ணப்ப முடிவு திகதி Apr.-10 வரை நீடிக்கப்பட்டுள்ளது

இது வரை விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

போட்டிப் பரீட்சைக்கான

விசேட பயிற்சி வகுப்புகள் 2ஆம் பிரிவு

**ஆரம்பம்: 30 — 03 — 1991 (10 a.m.)**

பாடநெறி: கிரகித்தல், நுண்ணறிவு, கல்வி நிருவாகம் (விடய ஆய்வு)

**தகைமைகள்:**

1. பட்டதாரி/ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் உடையோராயின் 5 வருட சேவை அல்லது
2. ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் பெற்ற பட்டதாரி ஆசிரியர். அல்லது
3. 10 வருடம் சேவையாற்றிய பயிற்சி பெற்ற ஆசிரியர், அல்லது
4. நடனம், சங்கீதம், கைத்தொழில், உடற்கல்வி சித்திரக் கலை மனையியல் ஆசிரியர்களாயின் 5 வருட சேவை.

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரத்திரட்டுகளையும் எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில் மட்டும்.
★ இலவச பாடக்குறிப்புகள்;
★ கட்டணம் ரூபா 300.00

விவரங்களுக்கு: நேரில் மு. ப. 9-00 — 12-00

**ASTAN INSTITUTE**

101/10, Stanley Road, JAFFNA.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி-4812]



சுகாதார உதவியாளராக (Health Visitors)

## பயிலுநர்கள் தெரிவு - 1991

சுகாதார உதவியாளராகப் பயிற்சியளிப்பதற்குத் தேர்க்கப்படும் தகுதியுள்ள ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவுசெய்யப்படுபவர்கள் தற்காலிகமானது நிரந்தர பதவிகளுக்கு உரித்துடையவராக மாட்டார்கள். மாதாந்தம் ரூபா 200/- அலவன்சாக வழங்கப்படும். வேறு படிகள் வழங்கப்படமாட்டா.

**தகைமைகள்:-**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை - 18 வரு - 40 வருடம்;
3. கல்வித் தகைமை:

(அ) கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் (பழையது) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி/தமிழ் இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் அத்துடன் இரசாயனம், பௌதீகம், உயிரியல், விலங்கியல், தாவரவியல் இவற்றுள் ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) 6 பாடங்களில் சித்தி (இரண்டு தடவைகளில்) இவற்றுள் தாய்-மொழி / தமிழ் இலக்கியம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும், இவற்றுடன் இரண்டு விஞ்ஞான பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய கல்வித் தராதரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி (இரு தடவைகளில்) இவற்றுள் தாய்மொழி / தமிழ் இலக்கியம், கணிதம் ஆகியவாறுடன் இரண்டு விஞ்ஞானப் பாடங்களிலும் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

கல்விப் பொது உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் சித்தியடைந்தோரும், இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களைத் தாமே தயாரித்து 09-04-91ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்கதாக இப்பணிமனைக்கு அனுப்பி வைக்கவும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த யாவரும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

டாக்டர் ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

59, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம். [சி/5...]


# செம்பியன்பற்றில் விவசாயிகளுக்கு கெயர் கடன் உதவி

தாளையடி, மார்ச் 25

செம்பியன்பற்றில் சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கு, நூறு விவசாயிகளுக்கு ஒன்றரை லட்சம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

'கெயர்' ஸ்தாபனம் இக் கடனுதவியை செம்பியன்பற்று தெற்கு சிக்கனக் கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம் மூலம் வழங்கியது.

ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ஆயிரத்தி ஐந்நூறு ரூபா பெறுமதியான சிறுதானிய விதைகள், உரவகைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், இயந்திர நீர் இறைக்கும் இயந்திரங்களை சுழற்சி முறையில் விவசாயிகள் பயன்படுத்துவதற்காக 'கெயர்' ஸ்தாபனம், செம்பியன்பற்று தெற்கு சிக்கனக் கூட்டுறவுக் கடனுதவிச் சங்கத்துக்கு கடனாக வழங்க முன் வந்துள்ளது.

அத்தோடு, ஒவ்வொரு விவசாயிகளுக்கும் 30 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட உள்ளது. [இ-144]

## பத்திரிகைத் துண்டுடன் சென்றவர் மீது விசாரணை

நெடுந்தீவு, மார்ச் 25

பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி ஒன்றை வெட்டி எடுத்துவந்த இளைஞர் ஒருவர் நயினாதீவு முகாமில் சோதனையின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டு மறுநாள் விடுவிக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை யாழ். நகரில் இருந்து இவர் நெடுந்தீவுக்கு வந்தபோது இச் சம்பவம் நிகழ்ந்தது. [இ-111]

## பனை ஓலை விசிறிக்கு கிராக்கி

கொக்குவில் மார்ச் 25

வெப்பகாலம் ஆரம்பித்துள்ளதாலும் மின்சாரம் இல்லாததாலும் தற்போது குடாநாட்டில் பனை ஓலை விசிறிகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் அரியாலையில் திறந்து வைக்கப்பட்ட அரி-சோட்ட பனம் பொருள் அங்காடியில் பனை ஓலை விசிறிகளை பலரும் வாங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

பனை ஓலை விசிறிக்கு அடுத்ததாக தற்போது கிராக்கியான பொருள் பனை ஓலைத் தொப்பி என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-69]

## தெங்கு - பனம் பொருள் சங்கங்களின் பன்முகப்பட்ட சேவையை வற்புறுத்தியவர் இராசு

யாழ்ப்பாணம், மார்ச் 25

வடமாகாணத்தில் பனை வளம் மூலம், மனை வளத்தைக் காத்து வந்த மக்களைப் பொருளாதார வளம் மிக்க மக்களாக்காண வேண்டுமென்று அயராது உழைத்தவர் அமரர் இராசலிங்கம். அதற்குச் சான்றாக அமைந்தது தான் திக்கத்தில் அமைந்துள்ள ஆசியாக் கண்டத்திலேயே பெரிய பனம் சாராய வடிசாலை.

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்னாள் எம்.பி த. இராசலிங்கத்தின் நினைவையொட்டி வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கங்கள் வெறும் மது உற்பத்தி நிறுவனங்களாக இருக்கக்கூடாது எனவும், அவற்றின் செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்ட நிலையில் விரிவான சேவையை ஆற்ற சங்கங்களின் சமாசம் வழிவகுக்க வேண்டுமெனவும் அவர் விரும்பினார். அந்த விருப்பத்தை இன்று சமாசம் இனிதே நிறைவேற்றி அவரது கனவினை நனவாக்கியுள்ளது — என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [அ]

## நெடுந்தீவில் பாண்

நெடுந்தீவு, மார்ச் 25

நெடுந்தீவில் உள்ள பேக்கரிகளில் நீண்ட காலத்துக்குப் பின் பாண் தயாரிக்கப்படுகிறது. [இ-111]

## மக்கள் வங்கிக்கு பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அடுத்த மாத நடுப்பகுதியளவில் பருத்தித்துறைக்கு வரவுள்ள விலவி விலவி கப்பலில் மக்கள் வங்கிக்கான 3 கோடி 50 லட்சம் ரூபா பணம் எடுத்து வரப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வங்கிக்கான பணம் 'குமண' கப்பலில் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் அந்தக் கப்பலில் பணம் வரவில்லை. [ஒ-5]


உ

## ★ உபநயன அழைப்பிதழ் ★

பிரமோதூத வருஷம் பங்குனி மீ 11ஆம் உ (25 - 03 - 1991) திங்கட்கிழமை காலை 11 - 15 முதல் 12 - 15 வரையில் உள்ள சுப முகூர்த்தத்தில்,

எங்கள் குமாரர்

★ பால ஸ்கந்தரூபனுக்கும் ★

★ பால ஸ்ரீஸ்கந்தராஜனுக்கும் ★

நீராவியடி சிவநந்தா வீதி தோப்பு மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் உபநயனம் நடைபெறும். (பூணூல் போடுதல்)

மேற்படி வைபவத்திற்குத் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வந்து செல்வங்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரம்மஸ்ரீ
நா. பாலசுப்பிரமணிய குருக்கள்
தம்பதிகள்
(யாழ். கொண்டலடி ஆத்திசூடி விநாயகர், கச்சேரியடி வைரவர் ஆலய பிரதம குரு)

[15928]



ஓம் சக்தி

## ★ திருமண அழைப்பு ★

நிகழும் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 13 ஆம் திகதி (27-03-1991) புதன்கிழமை பி.ப. 1-15 மணி முதல் 3-00 மணி வரை வரும் சுப முகூர்த்தத்தில்,

| மணமகன் : | மணமகள் : |
| --- | --- |
| அமரர் எம். ஸி. சுப்பிரமணியம் | அமரர் மாணிக்கம் கந்தசாமி |
| திருமதி இலக்சுமி சுப்பிரமணியம் | திருமதி புவனேஸ்வரி கந்தசாமி |
| அவர்களின் புதல்வன் | அவர்களின் புதல்வி |
| **செல்வன் சு. சந்திரதாஸ்** | **செல்வி க. பிரேமராணி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

அச்சுவேலி வடக்கு, வல்லத்திரகாளி கோவிலில் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது. இவ் வைபவத்தில் கலந்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கும்:

திருமதி இலக்சுமி சுப்பிரமணியம்,
21/1. கலைப்புலவர் வீதி.
யாழ்ப்பாணம்.

திருமதி புவனேஸ்வரி கந்தசாமி,
பரியாரியார் வளவு,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

[15925]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்லறைச் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிங்கர் தையல் இயந்திரங்கள் உதிரிப்பாகங்கள் விற்பனையாளரும், திருத்துவோரும் கௌரி தொழிலகம், இல. 531, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி மூலையில்) [16218]

## மாணவர் அகராதி

வரதர் மாணவர் அகராதி ஆங்கிலம் - தமிழ் ஆங்கிலம் பயில்வோருக்கு அரிய துணை நூல் 18,400 சொற்கள் கொண்டது நல்ல தமிழில் கருத்துக்கள். மலிவுப் பதிப்பு ரூபா 95 மட்டுமே எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தபாலில் பெறுவதற்கு ஆனந்தா புத்தகசாலை 226, காங்கேசன்துறை வீதி, & பூபாலசிங்கம் புத்தகசாலை, நிலையம், யாழ்ப்பாணம். [16198]

## சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண தந்த மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவண" 210 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16170]

## வாங்கப்படும்

பாவித்த ..., ஓடிக்கலோன், Gum (கம்) Vicks போத்தல், பவுடர் டப்பா, பேனைபொயின்ட் பேனை சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும் S. சதுர்வன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு ஸ்ரூடியோ பின்புறம், யாழ்ப்பாணம். [16...]

## SLEAS

SLEAS - பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச்சார்பு, கிரகித்தல் நூல்கள் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆசிரியர்: க. குணராசா, எம். ஏ. [16184]

## வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர், போத்தல், பித்தளை, செம்பு, சிமெந்து, கோழித்தீன, வெற்றுப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேலைதிரா்ச Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் லேன். யாழ்ப்பாணம். [16045]

## புளொக் புகைப்படம்

புளொக் (BLOCK) புகைப்படம் - தபர்சில் - கலர் படம் - ஓவியம் - பிறேம்போடுதல் - கலர் பிலிம் கழுவல் - பிரிக்கேன் முதலியவற்றிற்கு நாடுங்கள்! கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். [ஒ-5814]

## தவறிவிட்டது

ராஜ லட்சுமி சுப்பையா வயசீலன் ஆகிய எனது அடையாள அட்டை [710632200 V] நல்லூருக்கும், கலட்டி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். [16205]

## வினாத்தாள் விற்பனை

ஆண்டு 5 'புலமைப்பரிசில் பரீட்சைக்கான] கணிதம், தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்குரிய வினாத்தாள்கள் [புள்ளியிடும் திட்டம், விடைகளுடன்] விற்பனைக்குண்டு. 58, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். [16215]

---

# சபிண்டீகரண அழைப்பு

## அமரர் சின்னக்குட்டியர் இளையதம்பி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 - 07 - 1912 | 25 - 02 - 1991 |

26-03-1991 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மந்துவிலில் நடைபெற இருக்கும் அமரர் சின்னக்குட்டியர் இளையதம்பி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில், கொடிகாமம்.
[16214]

இ. நாகராசா (மகன்)
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

---

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்:
27 — 01 — 1968

வீரமரணம்:
25 — 03 — 1989

## கந்தையா முகுந்தன்
(லெப். ராயு)

இரண்டாண்டுகள் புரண்டோடின
இரண்டு சேனையின் திரண்ட முகுந்தா
வெருண்ட அந்நியப் படையின் கொட்டம்
உருண்டோடச் செய் தனையுனை அஞ்சலிக்கிறோம்!

உமது ஆத்மா சாந்தியடைய என்றும்
பிரார்த்திக்கும்!

முகுந்தன் வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

[16209]

---

# அந்தியேட்டி அழைப்பும்
# 45-ம் நாள் நினைவஞ்சலியும்



அன்னையின் மடியில்:
27—3—1930

அநியாய அழிப்பில்:
10—02—1991

## அமரர் மு. தர்மலிங்கம்

(புடைவை நெசவு உற்பத்தியாளரும்; விற்பனையாளரும்)

குடும்பத்தின் ஒளி விளக்காய், நல்வழியின் பேரொளியாய், தருமத்தின் உறைவிடமாய், தொழிலின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து, கொழும்பு செல்வதாகக் கூறிச்சென்ற உங்களை மாயமாய் வந்து கவர்ந்தான் காலன். 45 நாட்கள் சென்றாலும் உம் நினைவு எமைவிட்டு அகலுமா ஐயா!

ஆத்மா சாந்தியடைய செல்வச்சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியை 26—03—1991 செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வந்து கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

நெசவு நிலைய வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

உமது பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் உடன்பிறப்புக்கள்,
பேரமக்கள், உறவினர்கள்.

குறிப்பு: பி. ப. 2-00 மணிக்கு மட்டுவில் வடக்கு ஜெகத்குரு ஆதி சங்கராச்சாரியார் சுவாமி ..... ஆச்சிரமத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும். அதில் வந்து கொள்ளுமாறு ..... அழைக்கிறார். [15929]

---

# எரிபொருள் தரகர் வேடத்தில் இரகசியப் பொலிஸார்

தமிழகக் கரையோரங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இரகசியப் பொலிசார் எரிபொருள் தரகர்கள் ஐஸ் மீன் வியாபாரிகள் போன்று அப்பகுதிகளில் நடமாடி இலங்கைத் தமிழ் இளைஞர்களின் நடவடிக்கைகளை அவதானிக்கின்றனராம். [த-111]

---

# அன்னை பூபதி ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்பம்

1. பெயர்:-
2. முழுப்பெயர்:-
3. பாடசாலை:-
4. பிறந்த திகதி:-
5. கல்வி கற்கும் வகுப்பு:-
6. வதிவிடமுகவரி:-
7. பிரிவு:-

கட்டணம் ரூபா 3/-

.....................................
அதிபர்/பொறுப்பாசிரியர் ஒப்பம்

05-04-1991 அன்று 15 வயதிற்கு உட்பட்டவர்கள் கீழ்ப் பிரிவாகவும், அதற்கு மேற்பட்டவர்கள் மேற்பிரிவு எனவும் பத்திரத்தைப் பூர்த்தி செய்க.

விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் கோத்தணி மட்டத்தில் ஒரு பரீட்சை நிலையத்தில் 12-4-91 அன்று பரீட்சை நடைபெறும்.

19-04-91 அன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இறுதிப் பொதுக் கூட்டத்தில் பெறுமதி மிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அதிகூடிய பரிசில்களைப் பெறும் பாடசாலைக்கும் அதிகூடிய எண்ணிக்கையான மாணவர் பங்குகொண்ட பாடசாலைக்கும் பரிசு வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 05-04-91**

## விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

விண்ணப்பங்களை உங்கள் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க அலுவலகங்களில் ஒப்படைக்கவும்.

---

# நடைப்பட்ட O/L 90 பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவர்களுக்கு மாதாந்த பயிற்சிப் பரீட்சையும்-இலவச கருத்தரங்கும்

★ இரண்டாவது பரீட்சை 29-03-91 [வெள்ளி]

★ எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

| முற்பகல் - பரீட்சை | பிற்பகல் கருத்தரங்கு |
|---|---|
| 7-00 வர்த்தகம்-I | 1-45 வர்த்தகம் |
| 8-00 கணிதம் -I | 2-30 கணிதம் |
| 9-00 விஞ்ஞானம்-I | 3-15 விஞ்ஞானம் |
| 10-00 தமிழ்-I | 4 00 தமிழ் |
| 11-00 சமூகக்கல்வி-I | 4-45 சமூக கல்வி |
| 12-00 ஆங்கிலம்-I | 5-30 ஆங்கிலம் |

✱ 25-03-91 இல் எம்மால் நடத்தப்படவிருந்த அனைத்து பாடங்களுக்குமான முதலாம் பயிற்சிப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு,
பரீட்சைப் பகுதி,

**BOND INSTITUTES**

56 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16216]

---

# சதுர்த்த சிரார்த்த தினம்



தோற்றம்:
25-7-1930

மறைவு:
27-3-1987

திதி:
25-3-1991

## சபாரத்தினக்குருக்கள் இராமசந்திரஐயர்
(சின்னக்குருஐயா)

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்!

சாரதாபீடம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

இ. கெங்காதரக்குருக்கள்

[16213]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முளையிலேயே கிள்ளவேண்டும்

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மருதங்கேணியில் கஞ்சா பயிரிட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதனைப் பயிரிட்டவர்களை, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் விசாரித்து வருவதாகவும் செய்தி வெளி வந்திருக்கிறது.

கஞ்சா என்ற போதைப் பொருள்களைப் பாவிப்பவர்கள் இருப்பதாலேயே, அதற்கு இங்கு சந்தை வாய்ப்பு உண்டு என்று கருதியே சம்பந்தப்பட்டவர்கள் உணவுப் பயிர்களுடன் சேர்த்து அதனையும் வளர்த்திருக்கிறார்கள் என்று எண்ண வேண்டியுள்ளது.

கஞ்சா பயிரிடும் வழக்கமும், அதனைத் தொழிலாகக் கொள்ளும் நடைமுறையும், பொலீஸார் வேட்டையாடும் நடவடிக்கையும் தென் இலங்கையிலேயே அதிகம் உண்டு. காடுகளிலும், சேனைகளிலும் கஞ்சா பெருமளவில் சட்டவிரோதமாகப் பயிரிடப்படுவது சர்வ சாதாரணம். தமிழ்ப் பகுதிகளில் இது மிகவும் புதியது எனலாம்.

சாதாரண, இயல்புநிலை உள்ள காலத்திலேயே போதைப்பொருள் பாவனையும், உற்பத்தியும் சகிக்க முடியாதவை. அவை பெரும் சமூக விரோத, சமூக நாசக் குற்றங்கள். அவ்வாறிருக்க உரிமைப் போராட்டக் காலத்தில் போதைப் பொருள் பாவனையையோ, உற்பத்தியையோ எள்ளளவேனும் அனுமதிக்க முடியாது. அதுவும் போதைப்பொருள்பயிர்ச் செய்கை இங்கு புதிதாகத் தலையெடுக்கப் பார்க்கிறது. அதனைமுளையிலேயே கிள்ளி விடுவது அவசியம்.

போதைப் பொருள் அது எதுவாக இருந்தாலும், ஒருவன் அதற்கு அடிமைப்பட்டு விட்டால், அந்தப் பழக்கத்தை கைவிடுவது மிகவும் கஷ்டம். அதனால் சம்பந்தப்பட்ட தனிப்பட்டவர் மட்டுமன்றி அவரது குடும்பமும் சீரழிய வேண்டியதாகிறது.

போதைப்பொருள் பாவனை ஒருசமூகத்தை உருக்குலைத்து அழித்துவிடும் நாசகார ஆயுதம். அந்தச் சமூகத்தின் மனிதவளம் உட்பட சகல வளங்களையும் நிர்மூலமாக்க வல்லது. எனவே போதைப் பொருள் பாவனை, விநியோகம், உற்பத்தி எதனையுமே தமிழ்ப் பகுதிகளில் விட்டு வைத்தல் ஆகாது.

தமிழ் இனம் ஏற்கனவே சிங்களப் பேரினவாதத்தினால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கும் மேலாக போதைப்பொருள் என்ற ஆயுதத்தினால் தமிழர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்ளலாமா?

எனவே போதைப்பொருள் பாவனை, விநியோகம், உற்பத்தி ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துவதும், அவை குறித்துக் கண்காணிப்பாகவும், உன்னிப்பாகவும் இருப்பது அவசியம். போக்குவரத்து வசதிகள் குறைந்த இவ்வேளையில் வெளியில் இருந்து ஹிரோயின், பிறவுன் சுகர் போன்ற புதிய ரக போதைப் பொருள்கள் இங்கு வந்து சேர்வது கஷ்டம். அதன் நிமித்தம் உள்ளூரிலேயே பயிரிடக் கூடிய கஞ்சா போன்ற போதைப் பொருள்களை உற்பத்தி செய்யச் சிலர் நாட்டம் கொள்ளலாம். அதனைத் தடுப்பதற்கு அவசரமான செயல் திட்டங்கள் தேவை. அவையும் போர்க்கால நடவடிக்கைகள் என்ற அடிப்படையில் அமுல் செய்யப் படுதல் அவசியம்.

# வேலை இல்லாதோர் எண்ணிக்கை தமிழ் மாவட்டங்களில் அதிகரிப்பு

## சில பதவிகளுக்கு நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பம்

அச்சுவேலி, மார்ச் 25

படித்த இளைஞர்கள், யுவதிகள் வேலை வாய்ப்பு தேடி அலைவது தமிழ் மாவட்டங்களில் பெருகிவருகிறது. வேலை தேடுவோரில் பெண்களே அதிகம்.

ஒரு சில வெற்றிடங்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு நூற்றுக்கணக்கானவர்கள் விண்ணப்பிப்பதும் பரீட்சை எழுதுவதும் தற்போது சர்வ சாதாரண நிகழ்வு ஆகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைய (நாளாந்த சம்பள அடிப்படையில்) அடிப்படையில் எழுது வினைஞர், நூல் நிலைய உதவியாளர், ஆய்வு கூடக் கவனிப்பாளர் பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்ய போட்டிப் பரீட்சை நடைபெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தப் பரீட்சையில் அமைய அடிப்படையில் எழுது வினைஞர் பதவிக்கு 1208 பேர் பரீட்சை எழுதினர். பத்துப்பேர் வரையிலேயே இப்பதவிக்குத் தெரிவாக உள்ளனர்.

நூல் நிலைய உதவியாளர் பதவிக்கு 764 பேர் பரீட்சை எழுதினர். ஆனால் 6 பேர் வரையே தெரிவாக உள்ளனர்.

அதே போன்று ஆய்வு கூட கவனிப்பாளர் பதவிக்கு சுமார் 3 வெற்றிடங்களே உள்ளன. ஆனால் 206 பேர் இதற்குப் பரீட்சை எழுதினர். [இ-11]

## லங்கா சிமெந்து தொழிலாளர் கூட்டம்

தொழிற்சாலை நிலைபற்றியும் தொழிலாளர் நலன் கருதியும் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கந்தரோடை லங்கா சிமெந்து நிறுவன தற்காலிக கந்தோரில் தொழிலாளர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. [இ]

## பதில் உதவி அத்தியட்சகர்

நவாலி மார்ச் 25

யாழ். சிறைச்சாலை பதில் உதவி அத்தியட்சகராக யாழ். செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணிபுரியும் திரு கார்த்திகேசு பாலரத்தினம் நியமிக்கப்பட்டார்.

# அரச ஊழியருக்கு காப்புறுதி சுற்று நிருபம் வந்தது

கொழும்புத்துறை, மார்ச் 25

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப் படுத்தப்படும் அரச ஊழியருக்கான விஷேட வைத்திய காப்புறுதித்திட்டம் பற்றிய சுற்றுநிருபம் யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களுக்கு இம்மாதம் 12 ஆம் திகதி கிடைத்தது.

சுற்று நிருபத்தின் படி கொழும்பில் உள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையிலும், ஓர் அரச வைத்திய சாலையிலும் இருதய சிகிச்சை சிறுநீரக மாற்றுச் சிகிச்சை, கண்சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சையினால் பயன் தரக் கூடிய வேறு நோய்களுக்கான சிகிச்சை, வைத்தியசாலைச் செலவுகள் விஷேட வைத்தியர்களுக்கான பணச் செலவு, அறுவை சிகிச்சைச் செலவுகள் வழங்கப்படும்.

நோயாளர் ஒருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா ஒரு லட்சமும், ஒரு வருடத்திற்கு ரூபா ஒன்றரை லட்சமும், ஒருநாள் கொடுப்பனவாக ரூபா 100 வீதமும் ஆகக் கூடிய செலவாக ரூபா 5,000 உம் அவசர அறுவை சிகிச்சைக்கு இலங்கையில் பிரயாணம் செய்வதற்கு ரூபா 750 உம் வழங்கப்படும். ஓர் அரச ஊழியர் கட்ட வேண்டிய தொகை வருடத்திற்கு ரூபா 240 ஆகும்.

அங்கத்தவர்களாகச் சேர்ந்து ஒரு வருடத்துக்கு காப்புறுதி செய்ய வேண்டுமென்றும், வருடம் தோறும் காப்புறுதி புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும், வயது எல்லை 18 தொடக்கம் 60 வயது வரை என்றும் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-30]

## மட்டுவில் கத்தரி

சாவகச்சேரி, மார்ச் 25

பிரசித்திபெற்ற மட்டுவில் வெள்ளைக் கத்தரிக்காய் சந்தையில் பெருமளவில் விற்பனைக்கு வந்துள்ளது. [இ-31]

# 8 ஆயிரம் படிவங்களில் அரைவாசி திரும்பவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 25

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரணத் திட்டத்தின் கீழ் உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக 8 ஆயிரம் படிவங்கள் விநியோகிக்கப்பட்டன. ஆனால் 4500 படிவங்களே நிரப்பப்பட்டு செயலகத்துக்கு மீளக் கிடைத்துள்ளன.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்கு முன்னர் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் மரணமான, ஊனமடைந்தவர்கள் தொடர்பான நிவாரணம் வழங்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவால் இந்தப் படிவங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இம்மாத இறுதிக்குள் மீதமான படிவங்களை செயலகத்துக்கு அனுப்புமாறு உதவி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். [இ-3]

# பாரிய தாக்குதலுக்கு சதாமின் படை தயார்

டமஸ்கஸ், மார்ச் 25

குர்டிஷ் இனப் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை மீட்பதற்காக பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி சதாமுக்கு விசுவாசமான படைகள் தயாராகி வருகின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

சதாம் படைகள் ஸ்கட் ஏவுகணைகள் மற்றும் ஹெலிக்கொப்டர்களுடன் பாதுகாப்பு அரண் அமைத்துள்ளன என்றும் குர்டிஷ் போராளிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - அமெரிக்கா விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து - கிளர்ச்சியை அடக்க ஹெலிக்கொப்டர்கள் மூலம் தாக்குதல் நடத்துவதை ஈராக் படைகள் குறைத்திருப்பதாக வாஷிங்டனில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். [இ-எ]

# முற்றுகையில் பக்தாத் ஈரான் வானொலி அறிவிப்பு

தெஹ்ரான், மார்ச் 25

ஈராக் தலைநகர் பக்தாத் முற்றுகைக்குள்ளாகி இருப்பதாக தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

பக்தாத் நகருக்குச் செல்லும் சகல வீதிகளையும் ஜனாதிபதி சதாமுக்கு விசுவாசமான படைகள் தடை செய்து காவல்புரிந்து வருகின்றன என்று அச்செய்திகள் தெரிவித்தன.

இதே வேளை- பக்தாத்தில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் பதற்ற நிலை ஏற்பட்டு இருப்பதாகவும்-

சதாமிற்கு விசுவாசமான படைகளும் எதிர்ப்புப்படைகளும் மோதிக்கொள்ளும் நிலை உருவாகியிருப்பதாகவும் தெஹ்ரான் வானொலி மேலும் அறிவித்தது,

ஜனாதிபதி சதாம் ஹுசேனின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதி எந்த நேரமும் இடம் பெறக்கூடும் என்று பக்தாத் வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

# சதாமைக் கவிழ்ப்பதில் அமெரிக்கா பிடிவாதம்

வாஷிங்டன், மார்ச் 25

ஜனாதிபதி சதாம்ஹுசேன் பதவியில் இருக்கும் வரை ஈராக்குடன் அமெரிக்கா தனது ராஜரீக உறவுகளை மீண்டும் ஆரம்பிக்காது.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவையை ஜனாதிபதி சதாம் ஹுசேன் மாற்றி அமைத்தது பற்றி கருத்துத் தெரிவிக்கையிலே ஜனாதிபதி புஷ் இதனை அறிவித்தார். [இ-எ]

# சலுகை வழங்கும் தீர்வை ஏற்பதற்குத் தமிழர் தயாரில்லை

## உலகத் தலைவர்களுக்கு சுவாமிகள் கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இலங்கையின், வடகிழக்கில் வாழும் தமிழர்கள், கடந்த பல வருடங்களாக சொல்லொணாஇன்னல்களை அனுபவித்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் வெறும் சலுகைகளை வழங்கும் தீர்வையோ அல்லது அதற்கான அணுகு முறையையோ ஏற்பதற்குத் தயாரில்லை. எனவே தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கும் அரசியல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விதத்தில் தீர்வு அமையவேண்டும். அதற்கான அழுத்தத்தை, ஆலோசனையை இலங்கை அரசுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்குப் பொறுப்பான சுவாமி சித்ரூபானந்தா, உலகத் தலைவர்கள் பலருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கேட்டிருக்கிறார்.

பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு சுவாமிகள் தமது கடிதத்தின் பிரதிகளை அனுப்பி வைத்திருக்கிறார். இலங்கைப் பிரதமருக்கும் கடிதப் பிரதி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அவரது கடிதத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இக் கடிதத்தை அரசியல் கண்ணுடனோ அல்லது குறை காணும்நோக்குடனோ பார்க்காதீர்கள். இதனை இந்து சமயத் துறவி ஒருவரின் இயற்கையான மன வெதும்பலாக எடுத்துக் கொள்ளுங்கள்.

எந்த ஓர் அரசாங்கமும் உயர்ந்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்க நெறிகளை கடைப்பிடிப்பது அவசியம். ஆனால் இலங்கையில், உள்ள மதத் தலைவர்கள் கூட அரசாங்கத்தைத் தார்மீக வழியில் வழி நடத்தத் தவறிவிட்டார்கள்.

சிங்கள அரசியல்வாதிகள் தங்கள் நலன் கருதி இனவாதத்தை வளர்த்துவிட்டிருக்கிறார்கள். இதில் முந்திய தமிழ்த் தலைவர்களுக்கும் பங்குண்டு.

இந்த நாட்டில் வாழ்வதற்கும், தங்களுக்கென ஓர் அரசாங்கத்தைத் தீர்மானிப்பதற்கும் தமிழர்களுக்கு முழு உரிமையும் உண்டு. இதனைப் பெரும்பான்மையினருக்கு உணர வைப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இதனை மனதில் வைத்து அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் தமக்கிடையில் உள்ள வேறுபாடுகளைக் களைந்து தமிழர்களுக்குச் சுயாட்சி வழங்கும் திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும்.

அவ்வாறு செய்வதற்குத் தாமதம் ஏற்பட்டால், இலங்கையின் எதிர்காலம் எப்போதும் இருண்டதாகவே இருக்கும்.

கடந்த எட்டு மாதங்களாகத் தமிழ்ப் பொதுமக்கள் படும் அவலங்களை இங்கே சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். அவர்களின் அடிப்படை மனித உரிமைகளும், வாழ்வுரிமையும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் உணரமுடியும்.

ஆகையால் தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கும் அரசியல் முறை ஒன்றை உருவாக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்; ஆலோசனை கூறுங்கள். உங்கள் செல்வாக்கைப் பயன் படுத்துங்கள். ஆண்டவனின் நற்கடாட்சம் உங்களுக்குக் கிடைக்கும்- என்று சுவாமிகள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை:

## வினாத்தாள் எடுத்து வர பணிப்பாளர் கொழும்புக்கு

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்களை எடுத்துவருவதற்காக யாழ். கல்விப் பணிப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பு சென்றுள்ளார்.

வடக்கில் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ பரீட்சைகள் குறித்தும் பணிப்பாளர் கொழும்பில் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார். [ஒ-3]

## லொறி உரிமையாளர் பற்றி இப்படியும் ஒரு முறைப்பாடு!

யாழ். மாவட்டத்தில் இருந்து கொழும்புக்குச் சென்று பொருள்களை எடுத்து வர இங்குள்ள லொறி உரிமையாளர்கள் பின் நிற்பதாக முறைப்பாடு செய்யப்படுகிறது

அதனைத் தொடர்ந்து சகல லொறிகளையும் அரச அதிபர் பொறுப்பேற்க வேண்டும் என்றும், நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை வகுத்து லொறிகளை கொழும்புக்கு அனுப்ப வேண்டும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது

செயலகத்தில் வாரா இறுதியில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்களின் கூட்டத்தில் இந்த ஆலோசனையை அதிகாரி ஒருவர் கோரிக்கையாகவும் விடுத்தார். [ஒ-3]

## மரண அறிவித்தல்கள்

### இ. ஜெகநாதன்

(இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் - A.C.C.D

துணைவியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் மேற்கில் வசித்தவரும், இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளருமான [A.C.C.D] திரு இ. ஜெகநாதன் அவர்கள் 24-3-91 அன்று சிவ தமடைந்துவிட்டார்.

இ[ராஜேஸ்வரி விமலா]யின் அன்புக் கணவரும், பிரபாலினி, பிரபாகரன், ரட்ணாகரன், ஸ்ரீகணேசன், நிரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகரனின் அன்பு மாமனாரும், அபிலஷா, பிரசந்தியா ஆகியோரின் அன்புப் பேரனும், ஆனந்தநதன் [U.K], சுகிர்தலக்ஷ்மி, முத்துகுமாரசாமி ஜெயலக்ஷ்மி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 24-3-91 அன்று கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மணியர்பதி லேன், மனைவி, மக்கள்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [15930]

### கிருஷ்ணசாமி சாமி

தொண்டைமானாறு வல்வெட்டித்துறையை சேர்ந்தவருமான திரு. கிருஷ்ணசாமி சாமி அவர்கள் நேற்றுக் காலை [24-3-91] காலமானார்.

அன்னார் ஞானகத்தின் அன்புக் கணவரும், தேஜோமான் [முன்னாள், யாழ் வர்த்தக வங்கி], அனுஜா, கிரிஜா, சாருணி ஆகியோரின் அன்புத் தந்தையும், வீராச்சாமி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரரும், பாஸ்கரஜோதி, ரெங்கநாதன், ஜானகி மொய்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்விபுரம், அரியரெட்ணம், காலம்சென்ற குழந்தைவேல் ஆகியோரின் சகலனும் இராஜமணி, சுகிர்தவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று [24-3 91] மாலை துண்டி மயானத்தில் நடைபெற்றன,

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

77/5, புங்கன்குளம் வீதி, தகவல்:
கொழும்புத்துறை, குடும்பத்தினர்.
[15932]

### திருமதி தங்கம்மா கனகரத்தினப்

காரைநகர் விடாவில் காலஞ்சென்ற கந்தையா கனகரத்தினத்தின் அன்பு மனைவி தங்கம்மா 24-3 91 இல் காலமாகிவிட்டார். இவர் செல்வமலர் [மூளாய்ப் பிலவு காரைநகர்], நவமலர் [சட்ட வைத்திய அதிகாரி J. M O. யாழ். போதனா வைத்தியசாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும் சி. மகாதேவனின் [Retired audit clerk. Audit Dept. Colombo] அன்பு மாமியாரும், குகராஜன் [கொச்சிக்கடை], யோகராஜன் [சவூதி அரேபியா], மகாலட்சுமி, புஸ்பராணி ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவர்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 25 - 3 - 91 பி. ப 3 மணிக்கு சுதுமலை அம்மன் கோவில் மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

டாக்டர் (செல்வி) என். கனகரத்தினம்,
[யாழ் போதனா வைத்தியசாலை]
அம்மன் கோவில் மேற்கு ஒழுங்கை,
சுதுமலை, மானிப்பாய். [15931]

யாழ்ப்பாணம், கிழக்கிலங்கை

# இரு பல்கலைக் கழகங்களுக்கும் வருடாந்த நிதி ஒதுக்கீடு குறையும்

## மானியக் குழு முடிவால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம ஆகிய இரண்டுக்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கும் வருடாந்த நிதி ஒதுக்கீடு இம்முறை குறையப் போகிறது.

வடக்கு - கிழக்குத் தவிர்ந்த வெளிமாகாண மாணவர்களை இவ்விரு பல்கலைக் கழகங்களிலும் அனுமதிப்பதில்லை என்று மானிய ஆணைக்குழு எடுத்துள்ள முடிவைத் தொடர்ந்தே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இம்முறை மொத்தம் 1,112 மாணவர்களையும், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 315 மாணவர்களையும் அனுமதிப்பதற்குக் கோட்டா வழங்கப்பட்டுள்ளது. வெளி மாகாண மாணவர் அனுமதி தடுக்கப்பட்டுள்ளதால், வழங்கப்பட்டுள்ள கோட்டாவில் 85 சத வீதத்துக்கும் குறைவான மாணவர்களே அனுமதி பெறும் வாய்ப்பு உண்டு.

மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகங்களுக்கு பண ஒதுக்கீடு வழங்கப்படுவதுண்டு. கோட்டாவை விட மாணவர் எண்ணிக்கை குறையும் போது தமிழ்ப் பகுதிப் பல்கலைக்கழகங்கள் இரண்டுக்கும் இம்முறை ஒதுக்கீடு குறையபபோகிறது [அ-3]

## மேஜர் செங்கதிர், சிந்து நினைவஞ்சலி கூட்டங்கள்

### இன்று நான்கு இடங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியாவில் கடந்த மாதம் 25 ஆம் திகதி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரப் பொறுப்பாளரும் செயற்குழு உறுப்பினருமான மேஜர் செங்கதிர் [நடேசு ரஞ்சித வரதராஜா] வீரவேங்கை சிந்து [ரகுநாதன் சரவணபவன்] ஆகிய இருவரினதும் 30 ஆம் நாள் நினைவுநாள் தொடர்பாக இன்று யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

தென்மராட்சியில் மட்டுவில் மகாவித்தியாலயத்திலும் [மாலை 4 மணிக்கு]—

திவகத்தில் வேலணை மத்திய மகாவித்தியாலயத்திலும் [மாலை 5 மணிக்கு]—

வலிகாமத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் [மாலை 6 மணிக்கு]

வடமராட்சியில் கரவெட்டி விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திலும் [மாலை 7 மணிக்கு] நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. [உ]

## மீட்கப்பட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ 303ரகத் துப்பாக்கி — 3
★ இவற்றுக்குரிய ரவைகள் — 195
★ தொலைத்தொடர்பு கருவி — 1
★ ஜே. ஆர். ரக கைக்குண்டு — 10
★ பாகிஸ்தான் தயாரிப்பு கைக்குண்டு — 11
★ நடுத்தர ரக ரவைகள் — 1860
★ நேட்டோ ரவைகள் — 70

[உ-3]

## வெள்ளி, சனி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காப்புப் படையினர் முகாம்களையிட்டு வெளியேறமாட்டார்கள் என்றும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது

இது தொடர்பான உத்தரவு சகல முகாம் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

" 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஒரு நாடிப் பிடிப்பே. இத்திட்டம் வெற்றியளிக்குமாயின எதிர்வரும் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் மே மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஜீ சீ ஈ [உயர்தர] பரீட்சையின் போதும் இந்த யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்படும்''.

— ஜெனரல் சிறில் ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு கல்விப் பணிப்பாளர்கள் பரீட்சையை அமைதியாகவும், ஒழுங்காகவும் நடத்த புலிகள் இயக்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் ஒத்துழைப்பைப் பெற அனுமதி வழங்குவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. [உ-3]

## சிலாவத்துறை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தகர்க்கப்பட்டது

சிலாவத்துறை இராணுவ முகாமின் ஒரு பகுதியாக இருந்த பாடசாலைக் கட்டடம் ஒன்று விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [அ-உ]

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முன்னணியின் செயலாளராக திரு. யோகரட்ணம் யோகி [61, அப்துல் கபூர் மாவத்தை- கொழும்பு - 3] யின் பெயரும் சின்னமாக புலியும் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ]

## பேராசிரியர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமீபமாக மாரடைப்பால் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் விவசாய பீடம் ஆரம்பிக்கப்பட்டதும் பீடத்தின் முதலாவது பீடாதிபதியாக இவர் பதவி ஏற்றிருந்தார். [ஒ 3]

## அக்கரைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## கிரைப் வாட்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கண்டு பிடிக்கப்பட்டதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்தது.

கூடுதல் மதுசாரம் கலப்பது குழந்தைகளின் மூளை வளர்ச்சியைப் பாதிப்பதுடன், மதுவில் நாட்டம் கொண்டவர்களாக அவர்களை மாற்றிவிடும் என்று வைத்திய நிபுணர்கள் கருதுகின்றனர்.

பணி புரைக்குஏற்ப மருந்துவகைகளைத் தயாரிக்க மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு சுகாதார அமைச்சு எதிர்வரும் ஜுலை மாதம் வரை கால அவகாசம் வழங்கியுள்ளது. [உ-எ]

## சுப்பிரமணியம் சுவாமி காங்கிரஸ் பக்கம் சாய்வு?

புதுடில்லி, மார்ச் 25

மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான ஜனதாக்கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் கூட்டுவைத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்தன.

பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதாதள் [எஸ்] கட்சியுடன் தமது ஜனதா கட்சி இணையும் வாய்ப்பு ஏற்படவில்லை என்றால் காங்கிரஸுடன் தாம் தேர்தல் கூட்டு வைப்பது தவிர்க்கமுடியாததாகி விடும் என்று டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சொன்னார்

இரு கட்சிகளும் இணைவது குறித்து விரைவில் முடிவெடுக்கும் படி பிரதமர் சந்திரசேகரை, டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி வற்புறுத்தியிருக்கிறார். [உ-எ]

## கண்ணீர் அஞ்சலி

### பேராசிரியர் சோ. கந்தையா

கல்வியே கலையாய் வாழ்ந்து
புன்னகையே புதுக்கலையாய்
எங்கள் சிந்தை முழுதும் நிறைந்து
துன்பம் தீர்த்து வைத்த
தந்தைக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்!

கிளிநொச்சி மண்ணின் விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் சோ. கந்தையா அவர்களின் மறைவிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்.

— விவசாய பீட மாணவர்கள்.
[15933]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org